1978 மார்ச் 9]

அவர்கள் பர்மனென்ட் செய்யப்படுவார்களா என்ற கேள்வி தான் முன் வைக்கப்பட்டது. அப்படி இருப்பது உண்மையா? படித்தவர்களாக இருப்பவர்களேயும் தினக்கூலிகளாக வேலே வாங்கும் நிலைமை இன்றைக்கும் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியிருந்தால் அதை மாற்ற முயற்சிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தினக்கூலியாக வேலை செய்வது என்பது பாவ காரியம் அல்ல. அது படித்தவர்களானாலும் சரி, படிக்காதவர்களானாலும் சரி, முதலிலே தற்காலிகமாக எடுக்கப்படுகிறார்கள். அந்த வேலை நிரந்தரமாக இருக்க வேண்டுமென்று தீர்மானிக்கின்ற பொழுது அந்தக் குறிப்பிட்ட பணிக்காலம் முடிந்ததும் நிரந்தரமாக்கப்படுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால் மின் வாரியத்தைப் பொறுத்தவரையில் வேலைக்காரன் தேவையில்லாதிருந்தும்கூட சூப்பர்நியூமரரி போஸ்டுகளில் பலபேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எப்படியாவது வேலை கொடுக்க வேண்டிய கட்டாயம் மின்சார வாரியத்தில் இருக்கிறது.

நெல் கொள்முதல் விலை.

*464. வினா—திரு. மா. மணிமாறன்:

திரு. துரை கலியமூர்த்தி :

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல் விலை அதிகம் கிடைக்க போனஸ், வண்டிச் சத்தம் போன்றவை சேர்த்துக் கொடுத்து வந்ததை குடியரசுத் தலைவர் ஆட்சியில் நிறுத்தியதை மாற்றி மீண்டும் விவசாயிகள் அதனைப் பெறவும், அதிகப்படுத்தவும் அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இப்பொழுது சட்டபூர்வமான கொள்முதல் பெரிய அரைவை ஆலைகளில் மொத்த வணிகர்கள் கணக்கில் உற்பத்தியாகும் அரிசியின் மீது 20 சதவீதம் லெவி விதித்தும் தஞ்சை, தென்னாற்காடு, வடாற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் கொள்முதல் செய்யப்பட்டு வெளியே எடுத்துப் போகப்படும் நெல்/அரிசி மீதும் மாநிலத்திற்கு வெளியே எடுத்துச் செல்லப்படும் நெல், அரிசி மீதும் முறையே 20 சதவீதம் 10 சதவீதம் வீதம் செய்யப்படுகிறது. விவசாயிகளிடமிருந்து

நேரடி கொள்முதல் இல்லை, எனவே விவசாயிகள் தங்கள் உபரி நெல்லை வெளிச்சந்தையில் லாபகரமான விலைகளுக்கு விற்றுக் கொள்ள முழு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஆனுல் வெளிச்சந்தையில் நெல்/அரிசி வாங்கும் ஏற்பாட்டில் 1-2-1978 முதல் விவசாயிகளிடமிருந்து நேரடியாக மோட்டா ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 90-க்கும் நடுத்தர ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 95-க்கும் வாங்கப் படுகிறது.

இதனுல் விவசாயிகள் தங்கள் உபரி நெல்லை லாபகரமான விலைக்கு விற்க வாய்ப்பு அதிகரித்துள்ளது.

*465. வினு—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

நெல் கொள்முதல் விலையை விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும் வகையில் நிர்ணயம் செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : கொள்முதல் பற்றிய விலை மத்திய அரசால் நிர்ணயிக்கப்படுகிறது. அதனை மாற்றியமைக்கும் உரிமை மாநில அரசுக்குக் கிடையாது. மேலும் தற்பொழுது விவசாயிகளிடமிருந்து நேரடிக் கொள்முதல் இல்லை. கொள்முதல் ஆலை அதிபர்களிடமும் மொத்த வர்த்தகர்களிடமும் லெவி மூலம் செய்யப் படுகிறது. எனவே விவசாயிகள் உபரி நெல்லை வெளிச்சந்தைகளில் லாபகரமான விலைகளுக்கு விற்றுக்கொள்ள முழு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. தவிர, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் வெளிச்சந்தை வர்த்தகத்தின் ஒருபாகமாக, விவசாயிகளிடம் பொது விநியோகத்திற்கு பெரிதும் தேவைப்படும் மோட்டா ரக நடுத்தர நெல் வகைகளை முறையே குவிண்டால் ரூ. 90, ரூ. 95-க்கு வாங்க 1-2-1978 முதல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உணவு தானியங்கள் இருப்பு.

*466. வினு—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரிசி, கோதுமை, போன்ற உணவுப் பொருள் இப்போது எவ்வளவு இருப்பு உள்ளது ?